தனியார்களுக்கு அவர்களது விருப்பப்படி சென்றுவர தனிப்பட்ட சுற்றுலாக்களுக்காகவும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. இரங்கல் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(உ) 12-3-1995 அன்று சுங்குவார் சத்திரம் அருகில் சாலை விபத்தில் பலர் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், சுங்குவார்சத்திரம் அருகில் தமிழகத்தில் இதுவரை நடந்திராத விபத்து, நடந்த விபத்துகளிலே மிகக் கோரமான விபத்தாக, 12-3-1995 அன்று நிகழ்ந்த ஒரு கொடூரமான சாலை விபத்தில் பலர் கோரமாக உயிரிழந்துள்ள செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கீழப்பொடவூர் என்னும் கிராமத்திலிருந்து டிராக்டரில் சென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் கோரமான முறையில் இறந்துள்ளனர்; பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அரசின் சார்பிலும், தன் சார்பிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மலர்வளையம் வைத்துள்ளார்கள். மேலும், பாதிக்கப்பட்ட கிராமத்திற்கும், மருத்துவமனைக்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்கள்; எல்லாவித உதவிகளையும் செய்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

மிகக்கொடிய இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதியாக நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)